DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
Case No. **S.C. 387 of 2019** dated: 02.12.2022

**Deposition of witness for P.W.2**

| | |
|---|---|
| Name | : ஜெகதீஸ் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day of December 2022.

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** -

நான் மொபைல் ஷாப்பில் வேலை பார்க்கிறேன். எங்கள் மொபைல் ஷாப் கடை குமரன் நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது தான். பார்வை மகசரில் கையொப்பம் செய்ய போலீசார் என்னை காலை 8.00 மணிக்கு அழைத்தார்கள். கையெழுத்து வாங்கிய போலீஸ் தெரிந்த போலீஸ் என்றால் இல்லை. எழுதியிருந்த பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன். எதற்காக நான் கையொப்பம் செய்கிறேன் என்று போலீசார் என்னிடம் சொன்னார்கள். நானாகவே உண்மையை சொல்கிறேன். பொய் சொல்லவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், போலீசார் சொல்லியபடி கையொப்பம் போட்டேன் என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்தபடி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எங்கள் செல்போன் கடை குமரன் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்டு இருப்பதால், போலீசாரின் தயவு எங்களுக்கு வேண்டும்

என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டபடி கையொப்பம் செய்துவிட்டு அதை அனுசரித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Dt. 02.12.2022 VI Additional Sessions Judge

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
Case No. **S.C. 387 of 2019** dated: 02.12.2022

**Deposition of witness for P.W.3**

Name : வருண்

Father's name : சேகர்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day of December 2022.

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** -

நான் சேப்பாக்கத்தில் டி-சர்ட் கடையில் வேலை பார்க்கிறேன். நான் முதல் விசாரணையில் டி-சர்ட் கடை வைத்துள்ளேன் என்று ஏன் சொன்னேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. டி-சர்ட் கடைக்கு எப்பொழுது வேலைக்கு போவேன் என்றால் வேலை இருக்கும்போது செல்வேன் வேலையில்லாதபோது செல்லமாட்டேன். குறிப்பிட்ட நேரம் கிடையாது. டி-சர்ட் கடை என்பது டி-சர்ட் விற்கும் கடையல்ல. டி-சர்ட் தயாரிக்கும் கடை. மாதம் ரூ.20,000/- நான் சம்பளம் வாங்குகிறேன். நான் ஒரு கடைக்கு நான் சொல்வது போல் வேலைக்கு செல்வது என்றால் காலையில் சென்று மாலையில் பணி முடித்து வரவேண்டும் என்றும், எப்பொழுது வேண்டுமானாலும் வேலைக்கு செல்லலாம் என்று நான் சொல்வதிலிருந்து, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில வைத்து

கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். அன்றைய தினம் நான் என் டி-சர்ட் தயாரிக்கும் கடைக்கு செல்லவில்லையா என்றால் செல்லவில்லை. சாட்சி மீண்டும் தானாக அ.சா.2 ஜெகதீஸ் வேலைபார்க்கும் செல்போன் கடையில் வைத்து கையொப்பம் போட்டதாக கூறுகிறார். போலீசார் என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு வர சொன்னார்களா என்றால் இல்லை. நான் அங்கு வைத்து போலீசார் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் போட்டேன். எதற்காக கையொப்பம் போடுகிறேன் என்று போலீசார் சொல்லி தெரியும். அந்த இடத்தில் போலீசார் படம் வரைந்தார்கள். அவ்வாறு நான் கையொப்பம் போட்ட நேரம் காலை நேரம் தான். நேரம் சொல்லமுடியாது, 11.00 மணியிருக்குமா என்றாலும் சொல்லமுடியாது. நான் முரண்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.<br><br>Dt. 02.12.2022 VI Additional Sessions Judge |

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF VI ADDITIONAL SESSIONS JUDGE**
Case No. **S.C. 387 of 2019** dated: 02.12.2022

**Deposition of witness for P.W.5**

Name : தாமோதரன் (உதவி ஆய்வாளர்)

Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day of December 2022.

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** -

நான் மார்ச் மாதம் 2021ல் தலைமை காவலராக இருந்தேன். தற்பொழுது காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் பார்க்கும்போது 60வயது மதிக்கத்தக்க நபர் இறந்துதான் கிடந்தார். நான் பார்த்த இடத்தில் கிடந்தவர் இறந்துகிடந்தார் என்று அரசு மருத்துவமனை நமூணா ஏதும் பார்த்தேனா என்றால் இல்லை. கோடம்பாக்கம் ரோடு அம்மா பார்க் அருகே இறந்து கிடந்ததாக சொன்னார்கள். நான் பிரேதத்தை சம்பவ இடமான அம்மா பார்க் அருகிலிருந்துதான் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றேன். அம்மா பார்க் அருகே உள்ள செருப்புக் கடைக்கு எதிரில் ரோட்டு ஓரத்திலிருந்து இறந்த பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்துப்போனேன். இறந்துகிடந்தவரின் மேல் காயங்கள் ஏதும் இருந்ததா என்றால் நான் அதை பார்க்கவில்லை. பிரேதத்தை நான் தொட்டு துாக்கவில்லை. ஏற்கனவே துாக்கி

வைத்திருந்தார்கள். நான் காலை சுமார் 8.00மணிக்கு வண்டியில் ஏற்றிக்கொண்டு போனேன். பிரேதத்தை மருத்துவமனையில் சுமார் 11.00மணிக்கு ஒப்படைத்தேன். நான் பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைக்க ஆவணம் பெற்றது, மருத்துவமனையில் ஒப்படைத்தது ஆகியவற்றிற்கான ஆவணங்களை கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனக்கு அன்றைய தினம் இரவுப் பணி தான் என்றும், காலை பணி கிடையாது என்றால் அது சரியல்ல. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்த விவரமும் தெரியாது என்றும், பதிவு செய்யப்பட்ட வழக்குக்கு ஏற்ப எங்கள் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Dt. 02.12.2022 VI Additional Sessions Judge